மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
அசல் வழக்கு எண் 199/2019

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | நாராயணசாமி |
| பெயர்: | கணேசன்<br>(PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெப்பத்தூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 61/2023 |
| தொழில்: | | | |

<u>முதல் விசாரணை : 07.12.2023.</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

29.04.1953–தேதியிட்ட கே.வி.ரத்தின அய்யர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 28.04.1953–தேதியிட்ட கோதண்டராம அய்யர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 223/2010–ன் பிராதின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3–**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சொத்திற்கான அ பதிவேட்டின் இணைய வழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான கணிணி சிட்டாவின் இணைய வழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.